## இலங்கை ரஜரட பல்கலைக்கழகம் - 2017

இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 107(5) மற்றும் ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக் கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

(அ) நியமத்தின், 80 ஆம் பந்தியின் பிரகாரம் அறிவிக்கும் நாளின் பின்னர் 12 மாதங்கள் தீர்ப்பதற்கு தீர்மானித்திருந்தால் அவற்றை நடைமுறைப் பொறுப்புக்கள் எனவும் ஏனைய அனைத்து பொறுப்புக்களும் நடைமுறை அல்லாத பொறுப்புகள் எனவும் வகைப்படுத்தப்பட வேண்டும் எனினும அதற்கு முரணாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,202,260 தொகைக்கான லீஸின் கடன்கொடுத்தோர் மீதி நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆண்டின் போது பிணைமுறி உடன்படிக்கையை மீறியதன் காரணமாக விரிவுரையாளர் ஒருவரிடம் பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,784,401 தொகை தொடர்பாக நியமத்தின் 127 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 346,030 இற்கான சேவைக் கட்டணங்களில் ரூபா 288,362 தொகை 2017 ஆண்டிற்கு மற்றும் ரூபா 57,668 தொகை 2018 ஆண்டிற்கு உரியவைகளாக இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான ரூபா 57,668 தொகை மற்றும் 2018 ஆண்டிற்கான ரூபா 288,362 தொகை என கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் முற்கொடுப்பனவு ரூபா 230,694 இனால் முறையே குறைவாக மற்றும் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 393,915,972 தொகை எனினும் கணக்காய்வின் கணிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 389,488,843 தொகை ஆகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 4,427,129 தொகை மிகையாகவும் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி அதே தொகையால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 18,145,775 தொகை செலுத்த வேண்டிய மாணவ உதவி கொடுப்பனவு மற்றும் மஹபொல கொடுப்பனவு வங்கியில் இருந்து திருப்பி அனுப்பியவை, செலுத்த வேண்டிய 04 சம்பள மீதிகள் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் மூலதன நிதியத்தின் கீழ் ஏனைய செலுத்த வேண்டிய செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பழைய இருப்புக்கள் விற்பனையின் மூலம் ரூபா 1,027,954 இற்கான வருமானத்தில் நிலையான சொத்துக்கள் சிதைவடைந்த பண்டங்கள் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 365,500 இற்கான வருமானமொன்றும் அடங்கியிருந்ததுடன் அந்த சொத்துக்கள் தொடர்பான கிரயம் மற்றும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வினை இனங்கண்டு உரிய சொத்துக் கணக்குகளில் இருந்து மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) நிதி நிலைமைக் கூற்றில் அட்டுறு செலவுகள் என ரூபா 63,748,316 தொகை (பீட அட்டுறு செலவுகள் தவிர) காட்டியிருந்த போதிலும், கணக்காய்வின் கணிப்பின் பிரகாரம் அட்டுறு செலவு ரூபா 66,521,696 தொகை ஆக இருந்தமையால், மீளாய்வாண்டிற்கான அட்டுறு செலவு மற்றும் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,773,380 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முதலீட்டு செயற்பாடுகளில் காசு வெளிப்பாய்ச்சலின் கீழ் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தனதாக்கல் என ரூபா 1,070,521,983 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்கு காசுப்பாய்ச்சல் அல்லாத வெகுமதியாக கிடைத்திருந்த ரூபா 3,422,115 தொகை பெறுமதியான சொத்து ஒன்றும், மீளாய்வாண்டின் போது பணம் செலுத்தியிருக்காத போதிலும் கிடைத்திருந்த உபகரணங்களின் பெறுமதி மற்றும் கொள்வனவு செய்திருந்த உபகரணங்களுக்காக தடுத்து வைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 44,133,742 இற்கான தொகையொன்றும் உட்படுத்தியிருந்தமையால் முதலீட்டு செயற்பாடுகளில் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 47,555,857 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது ஆய்வுகள் மற்றும் ஏனைய நிதியங்களில் காசு உள்பாய்ச்சல் ரூபா 48,232,282 தொகை எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அவை ரூபா 33,316,246 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நிதிச் செயற்பாடுகளின் மூலம் கிடைத்திருந்த தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 14,916,036 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான நிதிச்செயலாற்றுகை கூற்றில் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து கிடைத்த பணத்தை வருமானங்களின் கீழ் காட்டும் போது ரூபா 3,169,650 தொகை திருப்பி நிதியத்திற்கு அனுப்பியிருந்த போதிலும் அத்தொகையினை கழித்து காட்டப்படாமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் மஹபொல கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய செலவுகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இருப்பு மெய்மையாதல் அறிக்கைகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் மத்திய களஞ்சியத்தில் மற்றும் 06 உப களஞ்சியங்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,006,122 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அம்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,729,978 தொகையிற்காக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 276,144 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருமானக் கூற்றில் 04 மீண்டுவரும் செலவு விடயங்களில் காட்டப்பட்டுள்ள செலவுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள செலவுகளிடையே ரூபா 8,493,870 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 திசெம்பர 31 திகதியில் உள்ளவாறு 04 நிலையான வைப்புக்களின் மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 71,228 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காணப்படும் பலவின வைப்புக்கள் மீதி ரூபா 7,509,780 தொகை எனினும், பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 7,357,688 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 15,092 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(அ) உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த 08 உத்தியோகத்தர்களினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து விஷேட சந்தர்ப்பங்களில் ஓடியதற்காக ரூபா 809,707 பெறுமதியான 8,045 லீற்றர் எரிபொருள் பெற்றிருந்ததுடன் மேலதிகமாக எரிபொருள் பயன்படுத்தப்பட்டு பிரயாணம் செய்த கடமைகள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 3 தேக்க வாகனங்கள் மாவட்டத்திற்கு வெளியே பிரயாணம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் 51 சந்தர்ப்பங்களில் 21,678 கிலோமீற்றர்கள் ஓடுவதற்காக எரிபொருளுக்காக ரூபா 195,193 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த பிரயாணங்களுக்காக கடமைகள் எவை என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றில் 29 சந்தர்ப்பங்களில் ஓடியிருந்த 12,267 கிலோமீற்றர்களுக்காக எழுதியிருந்த ஓட்ட அட்டவணைகளில் உத்தியோகத்தர் எவரும் கையொப்பமிட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகார சட்டத்தின் 94 ஆம் பிரிவு | எந்த மூலவளத்தினாலும் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கும் பணம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் 2013 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை மருத்துவ பீடத்தில் பதிவு செய்யும் வெளிநாட்டு மாணவர்களிடம் அறவிடப்பட்டிருந்த பாடநெறி கட்டணம் மற்றும் வதிவிட வெளிநாட்டு செலாவணி பண கணக்கின் வட்டி என கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 54,405,194 தொகை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்காமல் மருத்துவ பீட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் கல்வி பதவியணியின் வெளிநாட்டு பிரயாணங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1978 இன் 94 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவுகள் 8ஏ(1) மற்றும் (11) | மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 05 நிர்மாண வேலைளுக்காக உரிய உள்ளுராட்சி நிறுவனங்களின் மூலம் வரைபுகளுக்காக உள்ளுராட்சி நிறுவனங்களின் அங்கீகாரம் பெறல் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீளாய் வாண்டின் போது மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளின் போது நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடங்கள் எதற்கும் இசைவுச் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 134(3) | நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 571(2) | 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக உணவக வைப்பு ரூபா 256,500 தொகையும், ஒப்பந்த வேலை வைப்புக்கள் ரூபா 1,079,207 தொகையும் 2 வருடம் முதல் 13 வருடங்கள் வரையான காலவீச்சில் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரூபா 22,731,064 தொகைக்கான ஒப்பந்தவேலை தடுத்து வைத்தல் பணம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2015 ஜுலை 14 திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | விஷேட கருமம் ஒன்றிற்காக ஒரு தடவையில் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கக் கூடிய உச்ச அளவு முற்பணத் தொகை ரூபா 100,000 தொகை எனினும் அந்த வரையறையை மிகைத்து மீளாய்வாண்டின் போது 20 சந்தர்ப்பங்களில் ரூபா 125,000 முதல் ரூபா 363,300 தொகை வரை ரூபா 3,591,240 இற்கான முற்பணங்கள் வழங்கியிருந்ததுடன், அதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை<br>----------------------------------------------- | |
| (i) | 2015 செப்டம்பர் 18 ஆம் திகதிய 13/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு சாட்டப்பட்டுள்ள கடமைகளுக்காக மாதாந்த எரிபொருள் வரையறை போதியளவினதாக காணப்படாத விஷேட சந்தர்ப்பங்களில் உபவேந்தருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரிடமும் ஏனைய உத்தியோகத்தர் களுக்காக நிருவாக சபையிடமும் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் மேலதிக எரிபொருளுக் கான செலவுகள் மேற்கொண்டு மேலதிக எரிபொருள் செலவினை மீளளிப்பு செய்யப்பட வேண்டுமெனினும், அதன் பிரகாரம் செயற்படாமல் மீளாய்வாண்டின் போது அங்கீகரித்து வரையறையை கவனத்தில் எடுக்காமல் 08 உத்தியோகத்தர்களுக்கு மேலதிக எரிபொருள் 8,045 லீற்றர்கள் எரிபொருள் கட்டளைகளின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2012 ஏப்ரல் 23 திகதிய 981 ஆம் இலக்க சுற்றறிக்கை | பட்டதாரி பரீட்சாத்திகளுக்கான அரையாண்டி ற்கான கட்டுறை தயாரிப்பதற்காக ஒரு கட்டுநிதி கல்விப் பதவியணிக்கு ரூபா 600 வீதம் செலுத்த வேண்டியதுடன், ஒரு கட்டுரை தயாரிப்பதற்காக ஒரு அங்கத்தவரை விட கூடுதலான எண்ணிக்கையானவர்கள் பங்கு பற்றும் சந்தர்ப்பங்களில் அந்தப் பணத்தின் சமமாக பங்கிடமுடியுமெனினும், பங்குபற்றிய அனைவருக்குமாக ரூபா 600 வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 384,560 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (iii) | 2012 ஏப்ரல் 30 திகதிய 982 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆள்சேரப்பு மற்றும் பதவிஉயர்வு நடாத்தப் படும் நேர்முகப் பரீட்சைகளில் பங்குபற்றும் நேர்முகப் பரீட்சை குழுவின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் குறைந்த அளவு ரூபா 1,000 என்ற அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்று ஒவ்வொரு பரீட்சாத்திக்குமாக ரூபா 50 வீதம் செலுத்தப்பட வேண்டுமெனினும் சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணக்கமின்றி நேர்முகப் பரீட்சை தோற்றும் ஒவ்வொரு பரீட்சாத்திக்கும் ரூபா 1,000 வீதம் 15 சந்தர்ப்பங்களில் நேர்முகப் பரீட்சை குழு அங்கத்தவர்களுக்கு ரூபா 185,000 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 82,650,092 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 115,086,984 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 197,737,076 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது. பதவியணியின் கிரயம் ரூபா 92,375,965 இனால் அதிகரித்தல் மற்றும் அரசாங்க மீண்டுவரும் மானியம் ரூபா 54,825,000 இனால் குறைவடைதல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டில் காணப்பட்ட பற்றாக்குறை 2014 ஆண்டின் மிகை ஒன்றாக மாறியிருந்த போதிலும் 2015 ஆண்டின் போது மீண்டும் பற்றாக்குறையாக மாறியிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 654,773,984 ஆக காணப்பட்ட பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,261,528,920 தொகை வரை இடையறாமல் வளர்ச்சி அடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றல் மற்றும் மீளாய்வு

பல்கலைக்கழகத்தின் கல்வி செயலாற்றலினை மதிப்பாய்வு செய்வதற்காக 2016 ஆகஸ்ட் 18 திகதி பல்கலைக்கழகப் பேரவையினால் விதந்துரைக்கப்பட்டு 2016 நவம்பர் 01 திகதி பல்கலைக்கழகதின் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழககத்தின் ‘‘கல்வி பதவியணியினரின் வேலை கொள்திறனை கணிப்பதற்கான செயற்பாட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்’’ (Operating policy and procedure for Calculation of workload of Academic Staff ) என்ற பேரில் காணப்பட்ட வழிகாட்டல் கோவை 2018 ஆகஸ்ட் 30 திகதி அளவிலும் பல்கலைக்கழகத்தில் செயற்படுத்தி இருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினால் சேவை நீடிப்பு வழங்காமல் இருப்பதற்கு எடுத்த தீர்மானம் சட்டத்தை மீறிச் செயற்படல் என அனுராதபுர தொழில் நியாயமன்றினால் தீர்மானித்து வழங்கியிருந்த கட்டளையின் காரணமாக சேவை நீடிப்பு பெற்றிருக்காத பல்கலைக்கழக ஊழியர் ஒருவருக்கு ரூபா 162,609 நட்டஈடு ஒன்று பல்கலைக்கழக நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கும் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக தாமதமின்றி செயற்பட்டு அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் அடங்கிய முழுமையான பதில்களை உடனடியாக வழங்குதல் கணக்கீட்டு உத்தியோகத்தின் பொறுப்பாகுமெனினும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது வழங்கியிருந்த 20 கணக்காய்வு ஐய வினாக்களில் 03 ஐய வினாக்களுக்காக 2018 அக்தோபர் 12 வரை பதில்

கிடைத்திருக்கவில்லை. மேலும், 17 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்புவதற்காக பதில் எதிர்ப்பார்த்த திகதி முதல் 01 மாதம் மற்றும் 09 மாதம் வரை கால தாமதமாகியுள்ளது.

(இ) 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையில் 05 வருடங்களுக்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கியிருந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் நிருவாக சபையின் கவனத்தில் கொண்டுவந்து இருக்காததுடன் அது தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் 13(8) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

மருத்துவ மற்றும் சமமான விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர்கள் அலகு அமைந்துள்ள கட்டிடம் நிர்மாணிக்கும் முதல் கட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 673 மில்லியன் தொகை எனினும் 2011 ஆண்டில் அந்தக் கட்டிடத்தின் வேலைபூர்த்தி செய்யும் போது மொத்த வேலையின் பெறுமதி ரூபா 814.19 மில்லியன் தொகை ஆகி இருந்தது. எவ்வாறாயினும், அதன் மிகைச் செலவு ரூபா 141 மில்லியன் தொகைக்காக மீளாய்வாண்டின் போதேனும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் அந்த நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய அரை ஆண்டறிக்கை உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்படாமையால் மிகைவிதிப்பாக ரூபா 489,295 தொகை ஒன்று நிதியத்திற்கு செலுத்தியிருந்ததுடன், அவ்வறிக்கைகளை தாமதித்து அனுப்புவதற்கு செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்தினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மாணவ விடுதிகள் நடாத்துவதற்காக வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வீடுகளின் நீர்ச் சிட்டைகளை உரிய தினத்தில் செலுத்தாமையினால் தாமதக் கட்டணம் ரூபா 45,075 மற்றும் துண்டித்திருந்த நீர் வழங்களை மீண்டும் பெறுவதற்காக இணைத்தல் கட்டணம் என ரூபா 10,350 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளில் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்காமையினால் அவ் விடயங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இலக்குகள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்குவதை அளவீடு செய்வதற்கான சுட்டி இனங்கண்டிருக்கவில்லை.

மேலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்குதல் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் தயார்நிலை தொடர்பாக மதிப்பாய்வு செய்வதற்காக கணக்காய்வினால் அனுப்பியிருந்த வினாக்கொத்திற்கு பல்கலைக்கழகத்தினால் பதில் அனுப்பியிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய திறைசேரியின் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு செயலாற்றுகை எவ்வாறு உள்ளது என பரிசோதனை மேற்கொள்வதற்காக 2018 மே 11 திகதி என்ஸீபீ/ஏபீ/ஈ/ஆர்யூஎஸ்எல்/2018/05/13 இலக்கங் கொண்ட கடிதத்தின் மூலம் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் செயலாற்றுகை தொடர்பாக தகவல்கள் வினவிய போதிலும் அந்த தகவல்கள் கணக்காய்விற்கு அனுப்பியிருக்காமையால் உள்ளகக் கணக்காய்வின் முன்னேற்றத்தை பரிசோதிக்க முடியவில்லை.

### 6.2 கணக்காய்வுக் குழுக்கள்

மீளாய்வாண்டின் போது நடத்தப்பட்ட கணக்காய்வு குழுக்களின் தீர்மானங்கள் மற்றும் விதப்புரைகள் நிருவாக குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கவில்லை.

### 6.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த வேலை செய்முறை

#### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் பிரதான உணவகத்திற்கு சமையல் அறை ஒன்று நிர்மாணிப்பதற்காக உடன்பட்ட பெறுமதி ரூபா 2,668,999 இற்கான ஒப்பந்த வேலை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. பொறியியலாளர் மதிப்பீட்டின் குறிப்பிட்டுள்ள 10 வேலை விடயங்களுக்காக ரூபா 258,800 தொகைக்கான ஒப்பந்தக்காரருக்கு செலுத்தி இருந்த போதிலும், பொருத்தியிருந்த கட்டிடப் பொருட்கள் மற்றும் துணைக்கருவிகள் விவரக் குறிப்புக்ளுக்கு இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 15,069,440 தொகை பெறுமதியான 610 உருக்குக் கட்டில்கள் கொள்வனவு செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த விலைமனு ஆவணங்களில் அடங்காத விவரக் குறிப்பு தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் முறையாக அங்கீகரித்து இருக்காததுடன், பல்கலைக்கழகத்திற்கு கொள்வனவு செய்வதற்குத் தேவையாக இருந்த கட்டிலின் நீளம் 1,875mm மற்றும் அகலம் 825mm தொகை எனினும் தயாரிக்கப்பட்டிருந்த விலைமனு ஆவணங்களில் அகலம் 825mm மற்றும் அகலம் 975mm என விவரக் குறிப்பு இரண்டு விதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டு அளவைகளில் விலைமனு தாரர்கள் சமர்ப்பித்திருந்தனர். கூறுவிலைகள் ரூபா 19,500 முதல் ரூபா 62,000 வரையான வீச்சில் காணப்பட்டது. அந்த விலைமனுக்கள் மதிப்பாய்வு செய்த போது கூடிய விலை சமர்ப்பித்த அனைத்து விலைமனுக்களையும் தவிர்த்து குறைந்த 3 கூறுவிலை மாத்திரம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த 3 கூறுவிலைகளிலும் கேட்டிருந்த விவரக் குறிப்புக்களில் தகைமைபெற்ற விலைமனு தள்ளுபடி செய்து அதைவிட கூடியவிலையில் கட்டில் கொள்வனவு செய்தமையால் பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 504,378 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

(இ) பண்டங்கள், சேவைகள் மற்றும் வேலைகள் பெற்றுக்கொள்ளும் போது 2006 பெறுகை வழிகாட்டல்களை கடைபிடிக்க வேண்டும். அதற்கு மாறாக மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவரினால் தனது வெளிநாட்டு பிரயாணத்தின் போது 2,998 அமெரிக்க டொலர் செலுத்தி கமரா ஒன்று கொள்வனவு செய்திருந்ததுடன் நாடு திருப்பிய பிணை பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்திருந்ததுடன் அதற்காக ரூபா 456,745 தொகை மருத்துவ பீட நிதியத்தில் இருந்து மீளளிப்புச் செய்திருந்தது.

### 6.3.2 ஒப்பந்த வேலை நிருவாகத்தில் குறைபாடுகள்

இரண்டாம் தர ஊழியர்களுக்காக 4 உத்தியோகத்தர்களின் வீடுகள் நிர்மாணிப்பதற்காக உடன்பட்டிருந்த பெறுமதி ரூபா 52,703,236 தொகைக்காக ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் அடிப்படை தகைமைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக தயாரிப்பதற்கான முற்பணம் செலுத்தும் போது வேலைத்தளத்தால் நிறுவப்பட்ட பின்னர் 10 சதவீதம் மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதியில் 20 சதவீதத்தை மிகைத்தவுடன் மீதியான 10 சதவீதம் முற்பணத்தை செலுத்தும்படி தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு விதப்புரைந்திருந்த போதிலும் அதனைக் கவனத்தில் எடுக்காமல் உடன்பட்ட பெறுமதியில் 20 சதவீதமாக ரூபா 10,540,647 தொகை ஒரே தடவையில் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நிர்மாண வேலைகள் 2017 ஜூலை 05 திகதி பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 05 திகதி அளவில் நிர்மாண வேலைகள் இடையில் நிறுத்தி ஒப்பந்த வேலை கைவிடப்பட்டிருந்தது.

### 6.3.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தில் தொலை மற்றும் இடையறாத கல்வி நிலையம் ஒன்று நிறுவுவதற்காக ரூபா 143.3 மில்லியன் செலவில் நான்கு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக 2017 ஆகஸ்ட் 24 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு 2017 செப்தெம்பர் 18 திகதி ரூபா 16,449,500 இற்கான முற்பணத் தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நிர்மாண வேலைகள் 2018 திசெம்பர் 16 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 செப்டம்பர் 30 வரையும் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.3.1 அத்தியாயத்தின் பெறுகைகள் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் பெறுகைக்கு தேவையான ஆரம்ப தயாரிப்பு அலுவல்கள் அடங்கிய முன் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளாமை, கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு தேவையான பசுமை நிலைமையினை அளவை செய்யும் சான்றிதழினை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் பெற்றிருக்காமை ஆகிய காரணங்களினால் நிர்மாணவேலை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் ஒப்பந்தக்காரரினால் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முற்பணத் தொகையை கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தினால் இது தொடர்பாக போதியளவு நடவடிக்கை எடுத்திருந்ததாக உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) பிரயோக விஞ்ஞான பீடத்தில் பௌதீக ஆய்வு கூடத்தில் தேவையான தளபாடங்கள் பெற்றுத் தருமாறு 2016 செப்டம்பர் 06 திகதி பீடாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட பெறுகைகளுள் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைகளுக்கான தீர்மானம் எடுப்பதில் பலவீனங்களின் காரணமாக மீளாய்வாண்டு இறுதி அளவில் ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் குறிப்பிடட் வழங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**6.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

2018 மார்ச் 21 மற்றும் 2018 ஏப்ரல் 03 திகதிகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுவினால் வழங்கியிருந்த கட்டளைகளை செயற்படுத்துதல் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. விவரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | குழுவுடன் இணங்கிய விடயங்கள் மற்றும் குழுவின் விதப்புரைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (அ) | போட்டி அடிப்படையிலான கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளாமல் விடுதிகளுக்காக பவுஸர்களின் மூலம் நீர் வழங்கும் போது நிதி நட்டம் ஒன்று ஏற்பட்டிருத்தல். பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் வழங்குனராக செயற்படல் | (i) நீர் பெறுவதற்காக பல்கலைக் கழகத்தினால் கடைபிடிக்கப்பட்ட செய் முறை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு ஒரு மாதத்துள் பொது முயற்சிக் குழுவுக்கு அறிவித்தல் | இது தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும் இந்த விசாரணை அறிக்கையின் விதப்புரை 2018 ஆகஸ்ட் 15 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை. |
| | | (ii) நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் வலுவுடையதாக காணப் படாமையால் இவ்வாறான குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதான காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்படல் தொடர்பாக கவனம் செலுத்தி தீர்ப்பதற்கு விஷேடமாக செயற்படுதல். | உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக அங்கீகாரம் பெற்று ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | உபவேந்தரின் உத்தியோக பூர்வ வீட்டை சுற்றி மதில் ஒன்று கட்டும் நிர்மாண வேலை செயற்திட்டம் அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தினால் சமர்ப்பித்திருந்த பொறியியல் மதிப்பீடு தவறான முறையில் மாற்றி குறைந்த விலைமனுதாரரை இரத்து செய்து விலைகூடிய விலைமனுதாரருக்கு ஒப்பந்த வேலையை சாட்டுதல். | அரச பொறியியல் கூட்டுத் தாபனம் வழங்கிய மதிப்பீட்டை மாற்றம் செய்யும் தேவை ஒன்று காணப்பட்டதாத, மாற்றம் செய்ததால் ஏற்பட்டிருந்த தாக்கம் மற்றும் இவ்வாறான குற்றங்கள் மீண்டும் ஏற்படாமல் இருக்க பொறி முறையொன்று தயாரித்தல் தொடர்பாக குழுவிற்கு அறிவித்தல் | குழுவின் கட்டளைகளின் பிரகாரம் செயற்பட்டதற்கான சான்றுகள் காணப்படாமை. |

**7. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலை கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) | கணக்கீடு | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள், பேரேட்டு கணக்குகளின் பெறுமதிகள், துணைப் பதிவேடுகளுடன் இணங்காமை காணப்படல். மூலதன சொத்துக்கள் அகற்றும் போது முறையான கணக்கீடு ஒன்றின் பிரகாரம் அந்த மீதிகளை புத்தகங்களில் இருந்து அகற்றுதல். |
| (ii) | ஒப்பந்த நிருவாகம் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்படாத சந்தர்ப்பங்கள் காணப்படல். |
| (iii) | இருப்பு கட்டுப்பாடு | இருப்புக்களை பெறுமதி கணிக்கும் போது பௌதீக மீதி மற்றும் புத்தகப் பெறுமதிகளுக் கிடையே இணங்காமைகளை இணக்கஞ் செய்து இனங்காணல். |
| (iv) | வாகனக் கட்டுப்பாடு | குழாம் வாகனங்களில் இருந்து ஒதுக்கும் போது கடமையின் தேவைகளை இனங்கண்டு வாகனங்கள் ஒதுக்காமை மற்றும் இணைக்கப்பட்ட கடமை வாகனத்திற்கு வரையறையை மிகைத்து எரிபொருள் வழங்குதல். |
| (v) | நூலக நிருவாகம் | கல்வி பதவியணியின் அங்கத்தவர்களினால் நூலகத்தில் இருந்து பெற்றிருந்த புத்தகங்கள் ஒப்படைக்கும் போது 03 மாதம் முதல் 02 வருடங்கள் வரை கால தாமதம் காணப்படல். |